செ.வெ.எண்.23 நாள்.07.04.2017

திருநெல்வேலி மாவட்டம், தென்காசியில் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் டெங்கு காய்ச்சல் தடுப்பது குறித்து ஊராட்சி செயலர்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குநர்களுக்கு மண்டல அளவிலான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி, கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவ கல்லூரியில், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் டெங்கு காய்ச்சல் தடுப்பது குறித்து ஊராட்சி செயலர்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குநர்களுக்கு மண்டல அளவிலான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (07.04.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஆலங்குளம், கீழப்பாவூர், தென்காசி, செங்கோட்டை, வாசுதேவநல்லூர், கடையநல்லூர், கடையம், அம்பாசமுத்திரம் ஆகிய 8 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த கிராம ஊராட்சி செயலர்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி ஆப்ரேட்டர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு மற்றும் பன்றி காய்ச்சல் போன்ற நோய்களுக்கான அறிகுறிகள் ஒரு சில பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளது. இந்நோயை நமது மாவட்டத்தில் இருந்து அடியோடு விரட்டும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்று நமது மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி செயலர்கள், சுகாதாரப் பணியாளர்கள், பம்பு ஆப்ரேட்டர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்படுகிறது. குடிநீரை தொட்டியில் சேமித்து வைத்து முறையாக மூடாததால் டெங்கு கொசுக்கள் அதிகளவில் உற்பத்தியாக வாய்புள்ளது. பொதுமக்களுக்கு தற்போது விழிப்புணர்வுகள் அதிகமாக இருந்தாலும் ஊராட்சி செயலர்கள், சுகாதாரப் பணியாளர்கள் ஒருங்கிணைந்து ஒரே நேரத்தில் அனைத்து பகுதிகளிலும் கொசு ஒழிப்பு மற்றும் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அப்போது தான் இப்பணியில் முழுமையாக வெற்றியடைய முடியும்.

நகரம், கிராமம், பேரூராட்சி என அனைத்து பகுதிகளிலும் சுகாதாரத்துறை மேம்படுத்துதல் மூலம் நோய்கள் வராமல் தடுப்பது தான் முக்கிய பணியாகும். இப்பணிகளை தொடர்ந்து செய்திட வேண்டும். சுற்றுப்புறங்களை சுகாதாரமாக வைத்திருந்தால் டெங்கு, பன்றி காய்ச்சல் உட்பட பல்வேறு நோய்களில் இருந்து விடுபடலாம். புளியங்குடி, கடையநல்லூர் ஆகிய பகுதிகளில் டெங்கு தாக்கம் உள்ளது. எனவே, இப்பகுதிகளில் வீடு,வீடாக சென்று கொசு ஒழிப்பு பணிகளை தீவிரமாக செய்திட வேண்டும். பொதுமக்களும் இப்பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி நீங்களும் சிறப்பாக இப்பணிகளை மேற்கொண்டு நோய் தாக்கம் இல்லாத திருநெல்வேலி மாவட்டத்தை உருவாக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் மரு.இளங்கோவன், சங்கரன்கோவில் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் மரு.செந்தில்குமார், தென்காசி கோட்டாட்சித் தலைவர் (பொ) திருமதி.விஜயலெட்சுமி, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.கல்யாணசுந்தரம், தென்காசி வட்டாட்சியர் திருமதி.அனிதா, ஊரக வளர்ச்சி முகமை உதவி செயற்பொறியாளர் திரு.ராமச்சந்திரன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி செயலர்கள், பம்பு ஆப்ரேட்டர்கள், சுகாதாரத் துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.